முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 30.11.2021 ஆர்.சி.ஓபி.எண். 1/2019 எ.ம.சா.1 வித்யாலட்சுமி

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 5 ல் 4 பங்கு சொத்தை எனக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தாயாருக்கு மேற்படி சொத்தில் என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டிருந்ததோ அவை அனைத்தையும் எனக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 5 ல் 4 பங்கு என்று குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 4 பங்கு எது என்று செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட அனைத்து உரிமைகளையும் எனக்கு வழங்கியுள்ளதாக கூறியுள்ள நிலையில் மேற்படி உரிமைகள் என்னென்ன என்பது பற்றிய விவரங்கள் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் தாவா சொத்தை பொறுத்து அவருக்கு பாத்தியப்பட்ட அனைத்தையும் எனது பொறுப்பில் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்கொண்டு அதில் தலையிட மாட்டேன் என்றும் சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தாவா சொத்தில் எப்போதிலிருந்து வாடகைதாரராக இருந்து வருகிறார் என்றால் 2016 ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறார். 2016 க்கு முன்பு தாவா சொத்து எனது தாயாரின் பராமரிப்பில் இருந்தபோதும் எதிர்மனுதாரர்தான் அதில் வாடகைதாரராக இருந்தார். அவ்வாறெனில் எவ்வளவு ஆண்டு காலமாக எதிர்மனுதாரர் தாவா சொத்தில் வாடகைக்கு இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. எதிர்மனுதாரருக்கும், எனது தாயாருக்கும் தாவா சொத்து தொடர்பாக இருந்த தொடர்புகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் சிறு பிள்ளையாக இருந்ததால் அவ்வளவாக தெரியாது. எனது தாயார் சொல்லி சிறிதளவு தெரியும். தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர் எவ்வளவு முன்பணம் பேசி எவ்வளவு வாடகைக்கு கடையை வாடகைக்கு எடுத்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2016 ம் ஆண்டில் நான் தாவா சொத்தை எதிர்மனுதாரருக்கு வாடைக்கு கொடுத்த சமயத்திலும் எதிர்மனுதாரர்தான் தாவா சொத்தின் வாடகைதாரராக இருந்தார். எதிர்மனுதாரரின் மனைவி எனது தாயாருடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய

ஆவணத்தின் அடிப்படையில் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியும் ஆனால் எது தொடர்பான வழக்கு என்று தெரியாது நான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்போவதை தெரிந்து கொண்டு மோசடி ஆவணத்தின் அடிப்படையில் அந்த வழக்கை தாக்கல் செய்ததாக எனது தாயார் என்னிடம் சொன்னார். மேற்படி கோவை மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் ஒரு வார கால இடைவெளிக்குள் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் ஆனால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 2 வருடங்களுக்கு முன்பாகவே வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரருக்கு அனுப்பிவிட்டேன். அதனால் நான் வழக்கு தாக்கல் செய்யப்போகும் விவரம் அவருக்கு தெரியும். எனது தாயார் தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி எனது சுவாதீனத்தில் கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்து விட்டார். ஆனால் அந்த சமயத்தில் எதிர்மனுதாரர்தான் கடையின் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் கடையின் வாடகைதாராகத்தான் இருந்தார். எனது தாயாரான கற்பகாம்பிகாதான் கடையின் உரிமையாளராக இருந்தார். எனக்கு தெரிந்தவரையில் சுவாதீனம் என்பது உரிமைதான். தாவா சொத்தில் மொட்டை மாடி, படிக்கட்டுகள் அனைத்தும் உள்ள நிலையில் மொத்த சொத்துக்கள் அனைத்தும் அவரது சுவாதீனத்தில் உள்ளதாக கருத முடியாது. (சாட்சி மொட்டை மாடி மற்றும் படிக்கட்டுகள் இருப்பது குறித்து சாட்சியம் அளித்துள்ளதை எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆட்சேபித்தார். சாட்சி என்ன சாட்சியம் அளித்தாரோ அதனடிப்படையிலேயே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது). தாவா சொத்தில் எதிர்மனுதாரர் என்றைய தினம் வாடகைக்கு வந்தாரோ அப்போதிலிருந்து கடையின் சுவாதீனம் எதிர்மனுதாரர் வசம்தான் உள்ளது என்றால் பொய். எனது சுவாதீனத்திலோ எனது தாயாரின் சுவாதீனத்திலோ இல்லை என்றால் பொய். தாவா சொத்தில் உள்ள கடை எனது சுவாதீனத்தில் உள்ளதாக கூறியுள்ள நிலையில் நான் கடையில் என்ன வைத்திருந்தேன் என்றால் நான் கடையின் உரிமையாளர் அதனை எதிர்மனுதாரருக்கு கொடுத்திருந்தேன். நான் மனுவில் கூறியுள்ளவாறு 2016 ம் ஆண்டில் தாவா கடையை எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு விடவில்லை என்றாலும் வாடகை ஒப்பந்தம் எதையும்

ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும் அது பொய். எதிர்மனுதாரர் எனது தாயாரின் தாயார் காலத்திலிருந்து தாவா சொத்தில் வாடகைதாரராக இருந்து சுவாதீனம் இருக்கிறார் என்றால் அவர் எப்போதும் தாவா சொத்தின் வாடகைதாரராகத்தான் இருந்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள மனுவே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முழுச்சொத்தும் எனக்கு பாத்தியப்படாத நிலையில் 5 பங்கு சொத்தையும் சேர்த்து நான் மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. எனக்கு உரிமை இல்லாத பங்கையும் சேர்த்து காலி செய்ய சொல்ல எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் தவறு. நான் எதிர்னுதாரருக்கு தாவா சொத்தை வாடகைக்கு விட்டதற்கு ஆதரவாக எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழியாக விட்டேன். தாவா சொத்தில் மீதமுள்ள ஒரு பங்கு எனது தாயாரின் சகோதரரான காணாமல் போன வெங்கடேஷ்பாவுவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி வெங்கடேஷ் பாபு காணாமல் போய் 7 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது என்றால் இருக்கும். மேற்படி வெங்கடேஷ் பாபுவிற்கு பாத்தியப்பட்ட ஒரு பங்கு சொத்தில் அவரது சகோதர சகோதரிகளான எனது தாயார், மற்றும் தாயாரின் சகோதரியான சாந்திநாயகி, சகோதரன் சங்கர்கணேஷ் ஆகியோருக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் சொத்தில் உரிமை உள்ளது ஆனால் வாடகையில் உரிமை இல்லை. சொத்தில் உரிமை உள்ள நிலையில் வாடகையில் உரிமை இல்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் பொய். வெங்கடேஷ் பாபுவின் சகோதர சகோதரரிகள் மூன்று பேரும் சேர்ந்து தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் எனது தாயாரின் சகோதர சகோதரி தாவா சொத்தை பொறுத்து என் தாயாருககு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டார்கள். எனது தாயாரின் சகோதர சகோதரிகள் அவர்களுக்கு பாத்தியப்ட்ட சொ்துக்களை பொறுத்துதான் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்களே தவிர காணாமல் போன் வெங்கடேஷ்பாபுவின் சொத்தை பொறுத்து விடுதலைப்பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சொத்துக்கள் எதுவும் பிரிக்கப்படாமல்தான் உள்ளது. ஆனால் வாடகையை பொறுத்து அவர்கள் ஏதோ ஒரு ஆவணம் என் தாயாருக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்துள்ளதாக எனது தாயார் கூறியுள்ளார். மேற்படி

ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதைப்பொறுத்து என் தாயாரிடம்தான் கேட்க முடியும். நான் சொல்வதுபோல் ஒரு ஆவணமே இல்லாத காரணத்தால்தான் அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் ஒப்புக்கொள்ள மறுக்கிறேன் என்றால் தவறு. எனது தாயாருடன் எனக்கு அவ்வளவாக பேச்சுவார்த்தை இல்லை. எனது தாயாரை இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன். எனது தாயார் எதிர்மனுதாரருடன் ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு கிரைய தொகையை பெற்றுக்கொண்டுள்ளார் என்றாலும், எதிர்மனுதாரரை ஏமாற்றும் எண்ணத்தில் தாவா சொத்தை எனது பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து தாவா வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் பொய். நான் தாவா கடை பக்கம் போனதுகூட இல்லை என்றாலும், கடை பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நானும் எனது தாயாரும் கூட்டு சேர்ந்து எதிர்மனுதாரரை கடையிலிருந்து காலி செய்ய வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், அவருக்கு கொடுக்கவேண்டிய கிரையத்தொகையை திரும்ப செலுத்தாமல் இருப்பதற்காகவும், தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது தாயாரின் தாயார் காலத்திலேயே வாடகைதாரராக இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவை மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் மனைவியும், தாயாரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் வழன்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் வழக்கறிஞரை நியமனம் செய்து நான்தான் அந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்றாலும், தற்போது அந்த வழக்கினை பற்றிய விவரங்கள் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா மனுவை தாக்கல் செய்வற்கு எனக்கு எந்தவித அருகதையும் இல்லாத காரணத்தால் தாவா மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (வித்யாலட்சுமி)